# காச்மீர தமிழக கலாச்சார ஒற்றுமை

*சென்னை நங்கநல்லூர் உபந்யாஸம், 2011-மார்ச்-13*

*வித்வான் ஸ்ரீரமணசர்மா, ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ராள் ஸந்நிதி, நெரூர் அக்ரஹாரம்*

ஒரே பாரத தேசம் என்ற தத்துவம் ருக்வேதத்திலேயே *(3-53-12)* "விஶ்வாமித்ரஸ்ய ரக்ஷதி ப்$^{3}$ரஹ்மேத$^{3}$ம்´ ப$^{4}$ாரதம்´ ஜநம்" என்றவிடத்தில் காணப்படுகிறது. அத்தகைய பாரத தேசம் என்றால் என்ன என்று வரையறுக்கும் மிகப்பழமையான புராண வாக்யமாவது -

உத்தரம்´ யத் ஸமுத்$^{3}$ரஸ்ய ஹிமாத்$^{3}$ரேஶ் சை$^{1}$வ த$^{3}$க்ஷிணம் ।
வர்ஷம்´ தத்$^{3}$ ப$^{4}$ாரதம்´ நாம ப$^{4}$ாரதீ யத்ர ஸந்ததிஃ ॥

ஹிந்து மஹா ஸமுத்ரத்திற்கு வடக்கேயும் ஹிமயமலைக்குத் தெற்கேயுமாக உள்ள பூமியே பாரத வர்ஷம் என்று கூறுகிறது இந்த ச்லோகம். ப$^{4}$ா+ரத என்ற சொல் ஞானத்தின் பேரில் தீராத ஆவலைக் குறிக்கும். இதுவே இந்த பாரத தேசத்து மக்களின் லக்ஷணமாகும். அப்படியே இப்புண்ணிய பூமியில் ஆயிரக்கணக்கான வருடங்களாக பிறந்த பெருமக்கள் உலகவிஷயத்திலும் சரி உலகத்தினும் மேலான பரம்பொருளின் விஷயத்திலும் சரி ஞானத்தை விரும்பி விரும்பி திரட்டியுள்ளனர். ஆக இந்த பாரதம் ஒரே நாடு, ஒரே கலாச்சாரத்தை – வேத கலாச்சாரத்தை – அடிப்படையாகக் கொண்டது என்பது திண்ணம்.

இதனைப் பரிசீலிக்க பாரதத்தின் ஒவ்வொரு ப்ரதேசத்தையும் பார்க்கவேண்டியதில்லை. ஸமுத்ரத்திற்கு நேர்வடக்கே உள்ள தமிழ் தேசத்தையும் இமயத்திற்குத் தெற்கே என்றால் அப்படி உள்ள காச்மீரத்தையும் ஒப்பிட்டோமானாலே அவ்விரண்டு தேசங்களுக்குள் உள்ள ஒற்றுமையே அவ்விரண்டனுக்கிடையே உள்ள முழு பாரத தேசத்தின் ஒற்றுமைக்கும் எடுத்துக்காட்டாகித் தெரியவரும்.

தொலைதொடர்பு வசதிகளோ போக்குவரத்து வசதிகளோ இல்லாத பழங்காலத்தில் இத்தனை ஆயிரம் கிலோமீட்டர் பரஸ்பர தூரத்தில் உள்ள இரு தேசங்களுக்குள் அப்படிப்பட்ட ஒற்றுமை இருந்தது என்றால் அது மிகவும் அபூர்வமான ஒன்றே. பாரதத்தை ஒத்த பரப்பளவும் பன்மொழி புழக்கமும் உள்ளதாக ஐரோப்பா கண்டம் இருப்பினும் அங்கு இத்தகைய கலாச்சார ஒற்றுமை என்று தெளிவாக எடுத்துச்சொல்லும்படியாக ஒன்றும் விளங்குவதில்லை. அப்படியிருக்க பாரதத்தில் மட்டும் அவ்வாறு விளங்குகிறதென்றால் அது இங்கு ஒருசீராக பரவியிருந்த வேதத்தினால் தான் என்பது தெளிவு.

வேதமென்பது அகண்டமானது. ஆனால் சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றிவினோரான கலியுக மக்களுக்கு உபகாரமாக அதனைச் சீர்வகுத்துக்கொடுத்தார் வேத வ்யாஸர். இவரது வாஸ்தவமான பெயர் க்ருஷ்ணர் என்பதே. த்வீபத்தினைத் தவபூமியாகக் கொண்டதால் க்ருஷ்ண த்வைபாயநர் எனப்பட்டார். சென்ற யுகத்தின் இறுதியில் தர்மத்தைக்

காத்துக்கொடுத்த மூன்று க்ருஷ்ணர்களுள் இவரொருவர். தேவகீ மகனான க்ருஷ்ணரோ பிரசித்தமானவரே. இவர் துஷ்ட க்ஷத்ரியர்களை ஸம்ஹரித்து புவியில் தார்மீகமான ஆட்சி அமையும்படிச் செய்தார். அந்த தார்மீகமான ஆட்சியும் வாழ்க்கை முறையும் எத்தகையது என்று அறிவுறுத்துவது வேதமே ஆகையால் அந்த வேதத்தையும் அதை ஆதாரமாகக் கொண்ட சாஸ்திரங்களையும் க்ருஷ்ண த்வைபாயநர் காப்பாற்றிக்கொடுத்தார். மேலும் "ஸ்த்ரீ மூலம்' ஸர்வத⁴ர்மாணாம்" என்றபடி ஸ்த்ரீக்களின் பதிவ்ரதா தர்மமே மற்ற தர்மங்களுக்கு ஆதாரமாகையால் அதனை வாழ்ந்து காட்டினாள் க்ருஷ்ணா என்ற த்ரௌபதி. மஹர்ஷிகளுக்குக் கூட தனிப்பட்ட முறையில் இல்லாதபடி பதிவ்ரதைகளுக்கு கோவில் அமைகிறதல்லவா நம் தேசத்தில்! ஆக இந்த மூன்று க்ருஷ்ணர்களும்

வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை
நீதி வழுவா நெறி மன்னர்க்கோர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழை
மாதம் மும்முறை மழையெனப் பெய்யுமே

என்று திருமூலர் குறிப்பிட்ட மூவித தர்மத்தைக் காப்பாற்றிக்கொடுத்தனர் எனலாம்.

இதில் நாம் மேற்கொண்ட விஷயம் – வேத வ்யாஸர் வேதங்களை இக்காலத்து மக்களான நமக்கு ஏற்றவாறு சீர்படுத்தி அமைத்துக்கொடுத்தார் என்பது. வேதத்திலேயே வரும் பரத்வாஜ முனிவரின் சரித்ரத்தில் தெரியும்படி வேதமான அனந்தமாக இருக்கையில் அதன்கண் 1131 சாகைகளே மஹர்ஷிகள் திருவாய்களிலிருந்து வெளிவந்தன. அவற்றை வேத வ்யாஸர் காப்பாற்றிக்கொடுத்து அவரது காலத்திற்குப் பின்னர் சுமார் இரண்டாயிரம் வருடங்கள் பதஞ்ஜலி முனிவரின் காலம் வரையிலும் அவை பத்திரமாக இருந்தன என்று கூறலாம். ஏனெனில் அப்பதஞ்ஜலி அவற்றைத் தமது மஹாபாஷ்யத்தில் குறிப்பிடுகிறார். பிற்காலத்தில் இவற்றுள் பெரும்பாலானவை சீரழிந்து இன்று நமக்கு ஒன்பதே சாகைகள் கிடைக்கின்றன. இவற்றுள் க்ருஷ்ண யஜுர்வேதத்தில் தைத்திரீய சாகை, கட சாகை என்று இரண்டு சாகைகள் உள்ளன. இரு சாகைகளும் ஒரே வேதத்தைச் சேர்ந்தவையாகையால் ஒவ்வொன்றிலும் தனிச்சிறப்புகள் இருப்பினும் ஒற்றுமையே முக்கியமாகப் பிரகாசிக்கின்றது.

தமிழ்நாட்டில் ருக், யஜுஸ், ஸாம வேதங்கள் மூன்றும் புழங்கிவந்தாலும் தற்சமயம் க்ருஷ்ண யஜுர்வேதத்தின் தைத்திரீய சாகையே பரவலாக உள்ளது. காச்மீர தேசத்திலோ தைத்திரீயத்தின் மிக நெருங்கிய சாகையான கட சாகையே முக்கியமாகக் காணப்படுகிறது. இதன் பலனாக இவ்விரு சாகைகளை ஒட்டிய அனுஷ்டான சம்பிரதாயங்களிலும் இயற்கையாகவே ஒற்றுமை அமைகிறது.

தைத்திரீய சாகையை ஒட்டிய அனுஷ்டான முறைகளைக் கூறுவது ஆபஸ்தம்பர் என்ற முனிவரின் க்ருஹ்ய சூத்திரங்கள். அவ்வண்ணமே கட சாகைக்கு லௌகாக்ஷி என்ற முனிவர் சூத்திரங்கள் இயற்றினார். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் கர்ப்பாதானம்,

ஜாதகர்ம, நாமகரணம், ஸூர்ய தர்சனம், சந்த்ர தர்சனம், சௌளம், உபநயனம், வேத வ்ரதம், கோதானம், விவாஹம், நித்யாநுஷ்டானங்களான ஔபாஸனம், ஸ்தாலீபாகம் உள்பட அனைத்து ஸம்ஸ்கார கலாச்சார விஷயங்களிலும் ஒற்றுமையே காணப்படுகிறது.

சரி இதிலாவது ஒரே வேதத்தைச் சேர்ந்த ஒற்றுமைகள் பலவுள்ள இருசாகைகளை முன்னிட்டு வருவதால் இது இப்படியாயிற்று எனலாம். ஆனால் இப்படியில்லாமல் பொதுவாக சிஷ்டாசாரம் என்ற முறையில் வரக்கூடிய பூஜா பத்ததிகளில் கூட ஒற்றுமை காணப்படுகிறதானால் அது சிறப்புதானே! பாருங்கள்:

அண்மையில் காச்மீர பண்டிதர்களின் ப்ரஸ்நத் என்ற பத்திரிக்கையில் வெளிவந்த ஒரு கட்டுரையில் காச்மீரி ஒருவர் தனது பாட்டனார் தினமும் எப்படி அனுஷ்டானம் செய்வார் என்று எழுதியிருந்தார். நம் தமிழ்நாட்டு சிஷ்டர்களின் வழக்கத்தில் காணப்பட்டபடியே ஸகலமும் உள்ளது. தினமும் பூஜைக்கு முன் நதியில் (காவேரியில் அல்ல, ஜீலம் நதியில்!) ஸ்நானம் செய்துவிட்டு தனி (மடி) வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு நதியிலிருந்து (மடி) ஜலம் எடுத்துக்கொண்டு வருவாராம். பூஜா க்ருஹத்திலுள்ள பழைய (நிர்மால்ய) புஷ்பங்களை அகற்றுவாராம். ஒரு வழவழப்பான கல்லின்மீது ஒரு (சந்தனக்) கட்டையைத் தேய்த்து ஒரு பசையை (சந்தனத்தைத்) தயாரித்துக்கொள்வாராம். பல வழவழப்பான (சாலக்ராம) கற்களை பூஜா மண்டபத்தில் எடுத்து வைத்துக்கொண்டு அவற்றை பாலினாலும் மடி ஜலத்தினாலும் நீராட்டுவாராம் (அபிஷேகம் செய்வாராம்). பிறகு ஒரு (மடி) வஸ்திரத்தால் அந்த கல்களைத் துடைத்துவிட்டு அவற்றுக்கு அந்த (சந்தன) பசையைத் தடவி புஷ்பங்களால் அர்ச்சித்து தூபம் தீபமெல்லாம் காட்டி திராக்ஷை நைவேத்யம் செய்வாராம். பிறகு வேறு லௌகிக வஸ்திரம் உடுத்தி வெளியில் வேலைக்குச் செல்வாராம்.

மேற்கண்ட அனுபவம் நமது தமிழ்நாட்டு எந்த ஒரு சம்பிரதாய வீட்டிலும் காணக்கூடியதே. இதில் வேதமோ சூத்திரமோ விசேஷமாக ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் ஒற்றுமை தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

இது மட்டுமின்றி எழுத்துமுறையில் கூட தமிழகத்துக்கும் காச்மீரத்துக்கும் ஒற்றுமை உண்டு. தமிழக மரபில் ஸம்ஸ்க்ருத மொழியை க்ரந்த லிபியில் எழுதுவர். காச்மீரத்திலோ இதற்கு சாரதா என்ற லிபி உள்ளது. உலகிலேயே ஒரு தெய்வத்தின் பெயரை, அதுவும் கல்விக்கடவுள் ஸரஸ்வதியின் பெயரான சாரதா என்பதை தமது லிபிக்கு வைத்தவர்கள் காச்மீரிகள்தான். அத்தகைய சாரதா லிபிக்கும் க்ரந்த லிபிக்குமே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக க்ரந்தத்தில் ௠ என்று எழுத ர என்பதற்கான க்ரந்த எழுத்தை எழுதி இரண்டு புள்ளிகள் வைக்கவேண்டும். சாரதையிலும் அவ்வாறே -

சாரதை என்றவுடன் முக்கியமான மற்றொன்றைச் சொல்லவேண்டும். காச்மீர ஸம்ப்ரதாயத்தில் மிக முக்கியமான தேவதை சாரதையே. “நமஸ்தே ஶாரதே$^3$ தே$^3$வி காஶ்மீரபுரவாஸிநி” என்றும் நாமும் சொல்கிறோம் அல்லவா. வித்யைக்கு தேவதையான இவளைப் பெரிதும் போற்றுகின்றனர் காச்மீரிகள். பழமையான சாரதா பீடம் காச்மீரத்தில் தான் உள்ளது. தெற்கே தமிழகத்தில் ஸரஸ்வதியின் ஸ்தானமான ஸர்வஜ்ஞபீடம் காமகோடி பீடம் என்றால் வடக்கே அத்தகைய ஸர்வஜ்ஞபீடம் காச்மீரத்திலுள்ள சாரதா பீடமே. பழங்காலத்தில் இந்த சாரதைக் கோவில் புகழ்பெற்று விளங்கிற்று. (துரதிருஷ்டவசமாக இன்று அது அயல்நாட்டு ஆக்ரமிப்பில் உள்ள காச்மீரப் பகுதியில் உள்ளது மட்டுமல்லாமல் மூல விக்ரஹம், ப்ராகாரம் ஏதுமின்றி சிதிலமடைந்த கர்ப்ப க்ருஹமாக மட்டுமே எஞ்சுகிறது.)

இந்த சாரதையின் அருளால் (இவ்வுரையில் தொடக்கத்தில் கூறியபடி) முழு பாரத மக்களுக்கும் வித்யையின் பேரில் தீவிர ஆர்வம் உண்டு என்றாலும் காச்மீர பெருமக்கள் சிறப்பாக பல துறைகளிலும் முன்னோடிகளாக விளங்கினர். இதனைப் பல அறிஞர்களும் ஆணித்தரமாக எடுத்துக்காட்டியுள்ளனர். ஆனால் துரதிருஷ்டவசமாக, த்ரேதா யுகத்தில் பகவான் ஸ்ரீராமனும் த்வாபர யுகத்தில் பாண்டவர்களும் தம் தேசம் விட்டு பிரியும்படி ஏற்பட்டதுபோல் இந்த கலி யுகத்தில் இத்தகைய பெருங்குடிமக்கள் தமது தேசத்தை விட்டு விரட்டப்பட்டுள்ளனர். தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ வழிதேடி இவர்கள் தமது சொந்த ஊரை விட்டு ஓடிவரவேண்டி ஏற்பட்ட நிலை மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும்.

இந்நிலையில் வேதமே சொல்லியிருக்கும் வண்ணம் முழு பாரதமும் ஒன்றே என்றிருக்கையில் காச்மீர மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் தமிழகத்திலுள்ள நம்மாலும் உணரப்படவேண்டும். நமது ஒரே பாரதத் தாயின் மக்களான இவர்களும் நமது ஸஹோதரர்களே அல்லவா! தமது மொழியையும் எழுத்தையும் கலாச்சாரத்தையும் காப்பாற்றி சொந்த தேசம் திரும்ப விரும்பும் இவர்களுக்கு சொந்த மொழியுடனும் கலாச்சாரத்துடனும் சொந்த தேசத்தில் செழிப்பாக இருக்கும் தமிழர்களான நாம் நமது அன்பையும் உறுதுணையையும் அவசியம் காட்டவேண்டும். நாடுகடத்தப்பட்ட ஸ்ரீராமரும் பாண்டவர்களும் தமது தாய்நாடு திரும்பியபடியே இவர்களும் பகவத்க்ருபையில் சொந்த நாடு திரும்பி தமது பண்டைய கலாச்சாரப் பெருமையுடன் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும். இந்த விஷயத்தில் நமது ப்ரார்த்தனைகளும் செயல்பாடுகளும் கூட இருக்கவேண்டும்.

இதுவே இந்த நிகழ்ச்சியின் மூலம் நாமெல்லோரும் அடையவேண்டும் என்று ஸ்ரீ பெரியவாள் விரும்பும் விஷயமாகும்.

நமது ஆசார்ய பீடத்திற்கும் காச்மீர தேசத்திற்கும் ஆதி காலத்திலிருந்தே தொடர்பு உண்டு. ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாளின் மிக ப்ராசீனமான தனி கோவில் (காமாக்ஷி கோவிலில் உள்ள ஸந்நிதியைக் கணக்கிடாமல்) காச்மீரத்து ஸ்ரீநகரில் கிமு 407இல் அந்நாட்டு அரசனான கோபாதித்யன் என்பவனால் கட்டப்பட்டதாகும். ஆசார்யாள் தமது

தேசத்திற்கு விஜயம் செய்திருந்தமையை நினைவுகூரும் வண்ணம் அவ்வரசன் இதனைச் செய்தான். இன்றும் அந்த கோவில் ஸ்ரீநகரில் விளங்குகிறது. மேலும் 1980களில் ஸ்ரீ பெரிய பெரியவாளின் உத்தரவுபடி நமது ஸ்ரீ பெரியவாளும் ஸ்ரீ பால பெரியவாளும் அங்கு விஜயம் செய்து ஸ்ரீ பகவத்பாதாளின் தரிசனம் பெற்று அந்த சன்னிதியில் மூன்று நாட்கள் சந்த்ரமௌளீச்வர பூஜை செய்துள்ளனர். இவ்வாறு ஸ்ரீ பகவத்பாதாள் காலத்திலிருந்து இன்று வரையில் நமது ஆசார்ய பீடத்திற்கும் காச்மீரத்திற்கும் மிகுந்த தொடர்பு உண்டு.

அடுத்த 2வது ஆசார்ய ஸ்தானத்தில் மதிக்கப்படும் ஸ்ரீ ஸுரேச்வராசார்யாளின் பூர்வீகம் காச்மீரமே ஆகும். இவர் காச்மீர ராஜகுருவான ஹிமமித்ரன் என்பவரின் மகனார் ஆவார். ஸந்ந்யாஸம் ஏற்பதற்கு முன் பிஹாரில் மாஹிஷ்மதியில் வசித்து வந்தாலும் இவர் காச்மீர தேசத்தைச் சேர்ந்தவரே. மேலும் 16வது ஆசார்யரான உஜ்ஜ்வல சங்கரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீசரணர் காச்மீரத்தில்தான் (கலாபுரம் என்ற இடத்தில்) சித்தியடைந்தார். அவரது சிஷ்யரான 17வது ஆசார்யர் கௌட ஸதாசிவேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீசரணர் காச்மீரத்து ஸிந்து நதீ தீரத்தவரே ஆவார். மேலும், ஸ்ரீ ஆதி சங்கரர் காஞ்சீபுரத்தில் காமகோடி பீடத்தில் ஸர்வஜ்ஞபீடம் ஏறினாரானால், அவரது மறு அவதாரமாக “அபிநவ சங்கரர்” என்று போற்றப்பட்ட 38வது ஆசார்யரான தீர சங்கரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீசரணர் காச்மீரத்து சாரதா பீடத்தில் ஸர்வஜ்ஞ பீடத்தை ஆரோஹணித்தார். இதைத் தவிர மற்ற பல ஆசார்யர்களும் அவரவர்களது காலத்தில் காச்மீர தேசத்திற்கு விஜயம் செய்து அங்கு அதர்மத்தைப் பரப்புபவர்களின் மிகுதியால் பாதிக்கப்பட்ட ஸநாதன தர்மத்தை மீண்டும் நிலைநாட்டியுள்ளனர்.

இத்தகைய பெருமைக்குரிய ஆசார்ய பரம்பரையின் மரபுபடியே இன்றைய நமது ஸ்ரீ பெரியவாளும் ஸ்ரீ பால பெரியவாளும் காச்மீர ஹிந்துக்களின் / பண்டிதர்களின் விஷயத்தை மேற்கொண்டு அவர்களது ஸம்ஸ்கார கலாச்சார யோகக்ஷேமங்களுக்கு உண்டானதைச் செய்துவருகிறார்கள். காச்மீர தேசத்தில் தொடர்ந்து வரும் போர் நீங்கி அமைதி திரும்பும் உத்தேசத்துடனும் காச்மீர ஹிந்துக்களின் க்ஷேமத்திற்காகவும் அங்குள்ள வைஷ்ணவீ தேவி க்ஷேத்ரத்தில் அண்மையில் விச்வ சாந்தி மஹாயஜ்ஞத்தை நடத்தியுள்ளனர். மேலும் பல ஸத்காரியங்களைத் திட்டமிட்டுள்ளனர். அஃதனைத்திலும் பாரதீயர்களும், ஸனாதன தர்ம அபிமானிகளும், ஸ்ரீமடத்து பக்தர்களான நாம் யாவரும் பங்கேற்க வேண்டும் என்பது ஸ்ரீ பெரியவாளின் அபிப்பிராயமாகும் என்று உங்களைப் போல் ஒரு எளிய பக்தனாக மட்டும் இருக்கும் நான் பக்தர்களிடையே பகவத்விஷயத்தைச் சொல்லவேண்டும் என்ற தர்மப்படி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஸமர்ப்பணம்.

-*-*-*-